www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

FWC

ஐரோப்பிய வரலாறு - I
Europe History - I

Three Hours ten min

Gr -13 (2021)

25B | T | I

**கவனிக்க.**

- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை அளிக்குக.
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

---

- 1 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 1. சேன் 2. தேம்ஸ் 3. போ
4. விஸ்ரியூலா 5. சிந்து ( )

2) 1. கிளாஸ்கோ 2. மார்சேல்ஸ் 3. செபீல்ட்
4. பர்மிங்ஹாம் 5. மான்செஸ்ரர் ( )

3) 1. மத்தாயஸ் 2. மக்சிமில்லியன் 3. நெக்கர்
4. ஹீஸ்டாவுஸ் 5. வலன்ஸ்ரைன் ( )

4) 1. ஜீன்போடென் 2. நிக்கோலோ மக்கியாவலி 3. தோமஸ் ஹொப்ஸ்
4. றொபேர்ட்பீல் 5. ஜோன்லொக் ( )

5) 1. ரைபர் 2. தேம்ஸ் 3. டாகுஸ்
4. விஸ்ருலா 5. கீல் ( )

6) 1. தீப்ஸ் 2. மெகரா 3. மர்மாரா
4. கொரிந்த் 5. மிலேட்டஸ் ( )

7) 1. அலெக்சாந்தர் 2. திராஜன் 3. ஹட்ரிய்யன்
4. அன்ரொனினஸ் பியூஸ் 5. மார்கஸ் அவுரேலியஸ் ( )

8) 1. ஹோரஸ் 2. ஓவிட் 3. லிவி
4. ரசிற்றஸ் 5. அலரிக் ( )

9) 1. அமெரிகோ வெஸ்புக்சி 2. வாஸ்கோத பல்போவா 3. ஹெர்னாந்தோ கோட்டீஸ்
4. பிரான்சிஸ்கோ பிசாரோ 5. பிரான்சிஸ் ட்ரேக் ( )

10) 1. கலோன் 2. மிராபோ 3. ல∴பாயெற்
4. அபே சியேஸ் 5. ரோபெஸ்பியர் ( )

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

- **11 – 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1. ரைபர் நதி - மத்திய தரைக்கடல்
2. சேன் நதி - ஆங்கிலக் கால்வாய்
3. றைன் நதி - வட கடல்
4. தேம்ஸ் நதி - பால்டிக் கடல்
5. டான்யுப் நதி - கருங்கடல் ( )

12) 1. சியூஸ் - ஒலிம்பியா
2. அப்பலோ - டெல்பி
3. அதீனா - ஏதேன்ஸ்
4. அப்பரடயிட் - கொரிந்து
5. ஏரஸ் - தீவ்ஸ் ( )

13) 1. நூற்றாண்டுப்போர் - இங்கிலாந்தும் பிரான்சும்
2. ரோசாப் போர்கள் - இங்கிலாந்தும் பிரான்சும்
3. ஏழாண்டுப் போர் - இங்கிலாந்தும் பிரான்சும்
4. கிரிமியப் போர் - ரஷ்யாவும் துருக்கியும்
5. ஏழுவாரப் போர் - ஒஸ்திரியாவும் பிறஷ்யாவும் ( )

14) 1. சோபோர்ஸா - மிலான்
2. மெடிஸி - புளோரன்ஸ்
3. எஸ்தே - ∴பெரரா
4. வலோயி - நேபிள்ஸ்
5. கொன்சாகா - மந்துவா ( )

15) 1. யேசூற் - ஒரு கத்தோலிக்க சமயப் பிரசாரச்சங்கம்
2. கர்போனாறி - ஒரு இரகசிய இயக்கம்
3. சோல்வரைன் - கங்க வரிகள் பற்றிய ஓர் ஒன்றியம்
4. டாஸ் கப்பிற்றல் - லெனின் எழுதிய ஒரு நூல்
5. ஜீம்கர் - பிரஷ்ய நிலவுடமைப் பிரதானிகள் ( )

- **16 – 20 வரையான வினாவுக்களுக்கு X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1. செயூஸ் | A. காமதேவதை |
| 2. பொசைடொன் | B. அறிவு, கைவினைப்பணிகள் ஆகியவற்றின் தேவதை |
| 3. அப்ரோடைற் | C. வானத்தின் தேவதை |
| 4. அதீனா | D. வைன் கடவுள் |
| 5. டயனீஸஸ் | E. கடற்தெய்வம் |

1. DCEAB 2. CEABD 3. DEACB 4. BEACD 5.EDACB ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

17) X | Y

1. பிளேட்டோ
2. சோக்கிரடீஸ்
3. ஹிப்போகிரடீஸ்
4. அரிஸ்ரோட்டில்
5. சீரெரோ

A. 'மனிதன் ஒரு சமுதாய விலங்கு'
B. 'இயற்கையோடு உடன்படும் சரியான நியாயமே உண்மையான சட்டமாகும்'
C. 'சால்பே அறிவு'
D. 'எல்லாவற்றுக்கும் மனிதனே அளவுப் பிரமாணம்'
E. 'ஒவ்வொரு நோய்க்கும் இயற்கையான காரணமுண்டு'

1. DCEAB 2. CEABD 3. DEACB 4. BEACD 5. EDACB ( )

18) X | Y

1. கிளீஸ்தெனிஸ்
2. ஹெரொடோற்றஸ்
3. ஹிப்போகிற்றீஸ்
4. ஒக்ற்ரேவியன்
5. பெற்றார்க்

A. மருத்துவத்தின் தந்தை
B. அதீனிய ஜனநாயகத்தின் தந்தை
C. முதலாவது உரோமப் பேரரசன்
D. மனிதநேயத்தின் தந்தை
E. வரலாற்றின் தந்தை

1. DECAB 2. CEABD 3. DEACB 4. BEACD 5. EDACB ( )

19) X | Y

1. பிளேற்றோ
2. ஈசிற்றஸ்
3. பொக்காசியோ
4. இராஸ்மஸ்
5. தோமஸ் மூர்

A. டெகமெறோன் (Decameron)
B. யுற்றோப்பியா (Utopia)
C. மடைமை மீதான புகழ்ச்சி (Praise of folly)
D. "குடியரசு" (The Republic)
E. வரலாறுகள் (Histories)

1. DECAB 2. CEABD 3. DEACB 4. BEACD 5. EDACB ( )

20) X | Y

1. 313
2. 1215
3. 1598
4. 1848
5. 1989

A. நான்ற் பிரகடனம்
B. கிறிஸ்தவருக்கு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கிய பிரகடனம்
C. புரட்சிகள் ஏற்பட்ட வருடம்
D. பேர்ளின் சுடர் இடிக்கப்பட்டமை
E. பெரிய பட்டயம் (Magna Carta)

1. DECAB 2. CEABD 3.DEACB 4. BEACD 5. EDACB ( )

- **21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) புவியியற் கண்டுபிடிப்புக்கள்
1. தென்னாபிரிக்க முனையை பரத்தலோமியஸ்டயஸ் அடைந்தமை.
2. கிறிஸ்தோபர் கொலம்பஸ் புதிய உலகத்தைக் கண்டுபிடித்தமை.
3. கப்ரால் நியூபவுண்லாந்தை அடைந்தமை.
4. வாஸ்கொடகாமா கள்ளிக்கோட்டையை அடைந்தமை.
5. மகலன் பூமியைச் சுற்றி பிரயாணஞ் செய்தமை. ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

22) பிரஞ்சுப் புரட்சியின் பிரதான கட்டங்கள்.
1. ஸ்ரேற்ஸ் ஜெனரல் கூடியமை
2. பஸ்ரீல் கோட்டையைத் தகர்த்தமை
3. குடியரசுப் பிரகடனம்
4. லூயி XVII முடி சூட்டப்பெற்றமை
5. பயங்கர ஆட்சி ( )

23) இங்கிலாந்தின் பாராளுமன்றம்.
1. பெரிய பட்டயம் பாராளுமன்ற உருவாக்கத்தின் ஆரம்ப கட்டத்தைக் குறிக்கின்றது.
2. தனது சமய நடவடிக்கைகளுக்கு VIII ஆம் ஹென்றி பாராளுமன்றத்தின் உடன்படிக்கையைப் பெற்றுக் கொண்டான்.
3. ஸ்ருவேர்ட் மன்னர்களுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையில் தகராறுகள் ஏற்பட்டன.
4. 1688 இல் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது.
5. ஹனோபரிய அரசர் காலத்தில் பிரதம மந்திரியின் பதவி வலுவான அதிகாரத்தைப் பெற்றது. ( )

24) முப்பதாண்டுப் போர்.
1. கத்தோலிக்க நாடுகளுக்கும் சீர்திருத்தவாத கிறிஸ்தவ நாடுகளுக்கும் இடையிலான போராக ஆரம்பித்தது.
2. போர் பிரதானமாக ஜேர்மனியில் நடைபெற்றது.
3. ஒக்ஸ்வேர்க் சமாதானத்தின் குறைபாடுகளே போருக்கான பிரதான காரணமாகும்.
4. ஐரோப்பாவில் நடைபெற்ற இறுதிச்சமயப் போராக இது கருதப்படுகிறது.
5. போரின் முடிவில் ஃபிரான்ஸ் தோல்வியடைந்தது. ( )

25) மறுமலர்ச்சி
1. மறுமலர்ச்சி இத்தாலியில் ஆரம்பமானது.
2. சமய சீர்திருத்தத்தின் விளைவாக அது ஏற்பட்டது.
3. பின்னர் மறுமலர்ச்சி ஐரோப்பாவிலுள்ள வேறு நாடுகளுக்குப் பரவியது.
4. மறுமலர்ச்சி சமுதாயத்தில் உலகியல் நோக்கு கூடுதலாக முனைப்புப் பெற்றது.
5. மனித நேயவாதம் மறுமலர்ச்சியின் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். ( )

❖ **26 – 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து.**

**(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ……………… 1 எனவும்**

**(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 2 எனவும்**

**(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ……………... 3 எனவும்**

**(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 4 எனவும்**

**ஒருவிடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் அடைப்புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| அறிவுறுத்தல்கள் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒருவிடை அல்லது இரண்டுக்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் |

26) பின்வருவோரில் இசைப்பாடல்களை இயற்றிய கிரேக்க கவிஞர்கள் யாவர்?
A) ஸஃபோ B) பைதகரஸ் C) பின்டார் D) பெரிக்கிளிஸ் ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

27) மேல்வருவனவற்றில் புராதன கால உரோமபுரியிடையே நிலவிய பிரபல்யமான அரசயில் முறைகள் யாவை?

A) பிரபுக்கள் கூட்டாட்சி B) மன்னராட்சி

D) பேரரசு ஆட்சி D) கொடுங்கோன்மை ( )

28) மேல்வருவோரில் எவர்கள் பிரித்தானியாவிலே பிரதம மந்திரிகளாக இருந்தனர்?

A) காஸில்ரே B) கனிங் C) டிஸ்ரைவி D) கிளாட்ஸ்ர்ரன் ( )

29) மேல்வரும் ஐரோப்பியத் தலைவர்களுள் வியன்னா மகாநாட்டில் பங்குபற்றியோர் யாவர்?

A) மெற்ரானிக் B) நெக்கர் C) காசல்ரீ D) மசினி ( )

30) மேல்வருவோருள் பிந்திய மத்திய காலத்தில் வாழ்ந்த இத்தாலிய எழுத்தாளர்கள் யாவர்?

A) வில்லியம் ஷேஸ்பியர் B) பெற்றாக்

C) பொக்காசியோ D) தோமஸ்மூர் ( )

- **இல 31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**

31) உரோமத்தின் முதல் பேரரசர்.

1) கொன்ஸ்தாந்தின் 2) யூலியஸ் சீசர் 3) ஒகஸ்டஸ்

4) குளோடியஸ் 5) மார்க்கஸ் ஒரோலியஸ்

32) பாப்பரசரின் பாரம்பரிய தலைமையகம் அமைந்த இடம் எது?

1) அவிஞ்ஞோ 2) லண்டன் 3) மாசெல்ஸ்

4) ஜெனோவா 5) உரோம்

33) சட்டத்தின் சாரம் என்ற நூலை எழுதியவர் யார்?

1) மொண்டஸ்கியூ 2) அடம்ஸ்மித் 3) வோல்டயர்

4) கால்மார்க்ஸ் 5) ரூசோ

34) பிரான்சியப்புரட்சியின் தலைவர் யார்?

1) மிராபோ 2) மகா பிரட்ரின் 3) விக்ரர் இமானுவேல்

4) நெப்போலியன் 5) நெக்கர்

35) பிரான்சுப்புரட்சியின் குழந்தை என அழைக்கப்படுபவன்.

1) சேர்ச்சில் 2) நெப்போலியன் 3) கலோன்

4) 17ம் லூயி 5) மஸாரின்

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

- **இல 36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | நகரக்குடியரசுகளின் ஜனநாயகச் சார்பான பண்புகள் அதென்ஸிலே சிறப்புற்றிருந்தன. | பருவமடைந்த ஆண்கள் எல்லோரும் பங்குபற்ற முடிந்த சபையிலே அரசு தொடர்பான பிரதானமான விடயங்களை ஆதினியர் விவாதித்து அவை தொடர்பாக வாக்களித்தனர். ( ) |
| 37) | மறுமலர்ச்சிக் காலத்தில் ரோமானெஸ்க், கோதிக் கட்டடக்கலை மரபுகள் வளர்ச்சி யடைந்தன. | ஜோன் லொக் 'அரசாங்கம் பற்றிய இரு மனுவல்கள்' (Two treatises of Government) மூலம் சர்வாதிகார ஆட்சியை நியாயப்படுத்தினார். ( ) |
| 38) | பழைய ஆட்சி முறையில் திருச்சபை, இராணுவம், அரசாங்கம் ஆகியவற்றில் மேலான பதவிகளைக் கொண்டிருந்த பிரெஞ்சுப் பிரபுக்கள் வர்க்கத்தின் மேலாதிக்கம் பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக முடிவுற்றது. | பிரெஞ்சுப் புரட்சிக் காலத்திற் பிரபுக்கள் மானிய முறையிலான உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பறிகொடுத்து அவர்களின் நிலங்களும் அபகரிக்கப்பட்டு செல்வாக்கும் கட்டுப்படுத்தப்பட்டதால் சாதாரணமான குடிமக்களாயினர். ( ) |
| 39) | இரத்த ஓட்டத்தைப் பரசெல்சஸ் கண்டுபிடித்தான் | மாண்புமிகு புரட்சிக் காலத்தில் இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்ள்ஸினைக் கழுவேற்றினர். ( ) |
| 40) | ஒவ்வொரு அரசனும் தனது நாட்டிற்குரியது லூதரின் சமயமோ அல்லது கத்தோலிக்கமோ என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை ஒகஸ்ட்பேக் சமாதான உடன்படிக்கை வழங்கியது. | கத்தோலிக்க திருச்சபை சீர்திருத்தும் பொருட்டு றென்ட் மகா சபையைக் காட்டி கத்தோலிக்க திருச்சபையை சீர்த்திருத்துவதற்கு ஒக்ஸ்ட்பேர்க் சமாதான உடன்படிக்கை வழியமைத்தது. ( ) |



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

FWC

ஐரோப்பிய வரலாறு - II
Europe History - II

Gr -13 (2021)

25B | T | II

அறிவுறுத்தல்கள் :

- வினாத்தாளை விளங்கிக்கொள்வதற்காக மேலதிகமாக பத்து நிமிடங்கள் வழங்கப்படும். (மொத்தமாக 3 மணித்திலாயங்களும் பத்து நிமிடமும்)
- முதலாம் வினா கட்டாயமானது.
- அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).
- முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு ஐரோப்பிய புறவுருவப்படம் வழங்கப்படும்.

## பகுதி A

1) உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

1. கோர்சிக்கா 2. பிரினீஸ் 3. டனியூப் நதி 4. ரைன்நதி
5. வியன்னா 6. லண்டன் 7. ஜிப்ரோல்ற்றர் நீரிணை 8. ஜேர்மனி
9. பெல்ஜியம் 10. போல்டிக் கடல் 11. சென்பீற்றர்ஸ்பேக் 12. ஆங்கிலக்கால்வாய்

(12x1=12 புள்ளிகள்)

## பகுதி B

2) 1. கிரேக்கர் நகர அரசுகளின் அம்சங்களைப் பரிசீலனை செய்க. (6 புள்ளிகள்)
2. தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் புராதன கிரேக்கர்களின் சாதனைகளைப் பரிசீலனை செய்க. (8 புள்ளிகள்)

3) “மத்திய ஐரோப்பா நவீன ஐரோப்பாவாக மாற்றமடைவதற்கு மறுமலர்ச்சியே பிரதான காரணமாகும்.”
1. மறுமலர்ச்சி ஆரம்பித்த நாட்டின் பெயரைக் குறிப்பிடுக? (1 புள்ளி)
2. மறுமலர்ச்சி எதனைக் குறிக்கும் என்பதை விளக்குக? (3 புள்ளிகள்)
3. மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கு ஏதுவான காரணங்கள் யாவை. (4 புள்ளிகள்)
4. முன்னே சொல்லப்பட்ட கூற்றினை மறுமலர்ச்சியின் விளைவுகள் தொடர்பான பரிசீலனை செய்க. (8 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

4) “திருச்சபைக்கு எதிரான சீர்திருத்த இயக்கததை ஒரு சமயப் புரட்சி என்று கொள்வது கூடுதலான பொருத்தமுடையதாகும்”

1. திருச்சபைக்கு எதிரான சீர்திருத்த இயக்கம் எந்த நாட்டில் ஆரம்பமாகியது? (1 புள்ளி)
2. அந்தச் சீர்திருத்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
3. அந்தச் சீர்திருத்த இயக்கத்திற்கு ஏதுவான சமய, அரசியல், பொருளதார காரணங்களைப் பற்றி ஒரு சுருக்கமான விளக்கவுரை எழுதுக. (5 புள்ளிகள்)
4. திருச்சபைக்கு எதிரான சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள் தொடர்பாக மேற்குறித்த கூற்றினை ஆராய்க. (8 புள்ளிகள்)

5) சிறுகுறிப்பு எழுதுக.

1. உரோம இலக்கியம்
2. போர்த்துக்கல்லின் நாடுகாண் பயணம்
3. ஸ்பானிய தேசிய அரசாதல்
4. கிறிஸ்தவ நாகரிகம்

(8x2=16 புள்ளிகள்)

## பகுதி C

6) இங்கிலாந்தில் 1688 – 1848 ஆகிய காலப்பகுதியிற் பாராளுமன்ற முறை வளர்ச்சி பெற்றமையினை மேல்வருவன தொடர்பாகப் பரிசீலனை செய்க.

1. வரம்புடைய அதிகாரங் கொண்ட முடியாட்சி உருவாகியமை.
2. மந்திரிகள் சபை முறையும் பிரதம மந்திரியின் பதவி அதிகாரங்களும் வளர்ச்சி பெற்றமை.
3. வாக்குரிமை விரிவாக்கப்பட்டமை.

(16 புள்ளிகள்)

7) 1. கைத்தொழிற்புரட்சி முதன் முதலாக ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகளை ஆராய்க. (6 புள்ளிகள்)

2. கைத்தொழிற் புரட்சியின் பிரதான விளைவுகளைப் பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

8) 1. அமெரிக்க சுதந்திரப்போர் ஏற்பட்டமைக்கு ஏதுவான பிரதானமான காரணங்களைப் பரிசீலனை செய்க. (6 புள்ளிகள்)

2. நவீன வரலாற்றில் அப்போரின் முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

9) சிறுகுறிப்பு எழுதுக.

1. லூயி XVI
2. நெப்போலியன்
3. பிரான்சியப்புரட்சி
4. ஜோஷ்வோஷிண்டன்

(8x2=16 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

FWC


**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

**நான்காம் தவணைப் பரீட்சை - 2021**

**Conducted by Field Work Centre, Thondaimanaru.**

**4th Term Examination - 2021**

**ஐரோப்பா வரலாறு**




Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk